**செ.வெ.எண்:77** **நாள்:31.08.2019**

# பத்திரிக்கைச் செய்தி.

இந்திய தேர்தல் ஆணையம், வருகின்ற 01.09.2019 முதல் 30.09.2019 முடிய வாக்காளர் சரிபார்ப்பு திட்டம் என்ற புதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் நோக்கமானது, வாக்காளர் பட்டியலின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பது ஆகும். இதன்படி, அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்ப்பு திட்டம் (Election Verification Programme) 01.09.2019 முதல் 30.09.2019 முடிய நடைபெற உள்ளது.

இத்திட்டத்தின்படி வாக்காளர்கள் தாங்களாகவே, தங்களது வாக்காளர் பட்டியல் விபரங்களை சரிபார்க்கலாம். இதுமட்டுமல்லாமல், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் வீடு வீடாக சென்று வாக்காளர் விபரங்களை சரிபார்க்கவும், தகுதியுள்ள விடுபட்ட வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் நடவடிக்கை எடுப்பார்கள்.

மேற்படி திட்டத்தின்கீழ் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது பெயர், பிறந்த தேதி்.வயது, உறவினர் பெயர், உறவினர் வகை, புகைப்படம் மற்றும் பாலினம் குறித்த பதிவுகளை தாங்களே சரிபார்த்துகொள்ளவும், திருத்தங்கள் ஏதும் இருப்பின் அவைகளை குறிப்பிடவும் பின்வருமாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை (1) National Voters Service Portal (NVSP), (2)Voter Helpline என்ற கைப்பேசி செயலி, (3)வாக்காளர் பதிவு அலுவலர்/வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள வாக்காளர் உதவி மையம் (Voter Facilitation centre), (4) பொது சேவை மையங்கள் (CSC) மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் தங்களது தகவல்களை சரிபார்த்துக்கொள்ளலாம். மேலும், மாற்றுத்திறனாளி மற்றும் மூத்தகுடிமக்கள் வாக்காளர்கள் மட்டும், தங்கள் தேவை குறித்து, வாக்காளர் உதவி மையத்தின் (Voter Helpline) கட்டணமில்லா தொலைபேசி எண்.1950 என்ற எண்ணை தொடர்பு கொண்டு விபரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம்.

மேலும், வாக்காளர்கள் தங்களது விபரங்களை திருத்தும்பட்சத்தில், 1.பாஸ்போர்ட் 2.ஓட்டுநர் உரிமம் 3.ஆதார் எண் 4.குடும்ப அட்டை 5.அரசு அடையாள அட்டை 6.வங்கி கணக்கு புத்தகம் 7.உழவர் அடையாள அட்டை 8.பான் அட்டை 9.மக்கள் தொகை பதிவேட்டின் இந்திய பொது பதிவாளரால் வழங்கப்பட்ட நேர்த்தி அட்டை 10.வாக்காளர் அல்லது அவரது நெருங்கிய உறவினர் பெயரில் (அதாவது பெற்றோர் மற்றும் பிற) உள்ள, சமீபத்திய தண்ணீர்/தொலைபேசி/மின்சாரம் /எரிவாயு இணைப்புக்கான கட்டண ரசீதுகள் போன்றவற்றில் ஏதேனுமொன்றை தாங்களே பதிவேற்றம் செய்து திருத்தங்கள் மேற்கொள்ள குறிப்பிடலாம். மேலும், னுபைடைழஉமநச செயலியில் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட மின்னணு சான்றுகளையும் பதிவேற்றம் செய்யலாம்.

இந்த வாக்காளர் சரிபார்ப்பு திட்டத்தின்கீழ் குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல், பதிவுசெய்யாத வாக்காளர்களை சேர்த்தல், வாக்குச்சாவடி தொடர்பான கருத்துக்கள் குறிப்பிடுதல் போன்ற பணிகளை வாக்காளர்கள் மேற்கொள்ளலாம்.

மேலும், வாக்குச்சாவடி அளவிளான பணியாளர்கள் (BLOs), 01.09.2019 முதல் 30.09.2019 வரை வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை சரிபார்த்து, உரிய ஆவண நகல் பெற்று திருத்தங்களும், பதிவுசெய்யாத வாக்காளர்களிடமிருந்து படிவம்-6ஐ பெற்று சேர்த்தலும் நிரந்தரமாக மாற்றம் செய்யப்பட்ட மற்றும் இறந்த வாக்காளர்களை சரிபார்த்து படிவம்-7ஐ பெற்று நீக்கலும் மேற்கொள்ள உள்ளனர்.

இவ்வாறு சரிபார்க்கப்பட்ட பின்னர், 15.10.2019 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வெளியிடப்படும். வாக்காளர்கள் அதனையும் சரிபார்த்து கொள்ளலாம். மேலும், 01.01.2020 அன்று 18 வயது பூர்த்தியடையும் நபர்கள் (31.12.2001 (அ) அதற்கு முன் பிறந்தவர்கள்), வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட நாளான 15.10.2019 முதல் 30.11.2019 முடிய அனைத்து வேலை நாட்களிலும் சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி மைய அலுவலரிடம் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் ஆகியவை தொடர்பாக படிவங்கள் சமர்ப்பிக்கலாம். மேலும், 02.11.2019, 03.11.2019, 09.11.2019 மற்றும் 10.11.2019 ஆகிய விடுமுறை தினங்களில் நடைபெற உள்ள சிறப்பு முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் ஆகியவற்றிற்கு படிவங்கள் அளிக்கலாம். இவைகள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, 01.01.2020 முதல் 15.01.2020-க்குள் தேர்தல் ஆணையம் தெரிவிக்கும் நாளில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

எனவே, அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் இந்த வாக்காளர் சரிபார்ப்பு திட்டத்தினை முழுமையாக பயன்படுத்தி, தங்களது பெயர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்ப்பு செய்திடவும், 100% குறைபாடற்ற வாக்காளர் பட்டியல் தயார்செய்திட முழு ஒத்துழைப்பு வழங்குமாறும் அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**